# <u>காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்<br>09.11.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டத்தின்<br>தீர்மானம் நகல்கள்</u>

**பொருள் எண்: 1**

மாநில நிதி ஆணையம் (State Finance Commission) – பள்ளி மேம்பாட்டு மானியம் (School Improvemt Grant) – மூலதன பணி (Infrastructure Work) 2023-2024-ம் ஆண்டு திட்ட நிதியில் காயல்பட்டினம் நகராட்சி பகுதிக்குட்பட்ட, கீழ்காணும், நகராட்சி பள்ளிகளை மேம்பாடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.25741/2023/SS2 நாள்.26.10.2023–ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண் | பணியின் விபரம் | தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | காயல்பட்டினம் நகராட்சி ஓடக்கரை நடுநிலைப்பள்ளியில் உணவு பரிமாறும் கூடம் மற்றும் கழிப்பறை கட்டும் பணி | 52.00 |
| 2. | காயல்பட்டினம் நகராட்சி ஓடக்கரை நடுநிலைப்பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் கூடுதலாக கட்டும் பணி | 34.00 |
| | மொத்தம் | 86.00 |

இந்நகராட்சி பள்ளிகளை மேம்பாடு செய்வதற்குரிய திட்ட மதிப்பீடு ரூ.86.00 (ரூ.52.00 + ரூ.34.00) இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி, திட்டப்பணியின் அவசியம் கருதி மேற்காணும் பணிகளுக்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உரிய தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விபரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட உத்திரவு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மாநில நிதி ஆணைய திட்ட நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(கோப்பு எண். 1522/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.553</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 2**

மாநில நிதி ஆணையம் (State Finance Commission) – பள்ளி மேம்பாட்டு மானியம் (School Improvement Grant) – இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (Operation and Maintenance Works) 2023-2024 ஆண்டு திட்ட நிதியில் காயல்பட்டினம் நகராட்சி பகுதிக்குட்பட்ட, கீழ்காணும், நகராட்சி பள்ளிகளை மேம்பாடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 25739/2023/SS2 நாள். 26.10.2023–ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எ ண் | பணியின் விபரம் | தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | காயல்பட்டினம் நகராட்சி கே.டி.எம் தெரு துவக்கப்பள்ளியில் பள்ளி கட்டிடம் பராமரிப்பு பணி | 30.00 |
| 2. | காயல்பட்டினம் நகராட்சி தீவு தெரு நடுநிலைப்பள்ளியில் பள்ளி கட்டிடம் புதுப்பிக்கும் பணி | 14.00 |
| 3. | காயல்பட்டினம் நகராட்சி மங்களவாடி தெரு துவக்கப்பள்ளியில் பள்ளி கட்டிடம் புதுப்பிக்கும் பணி | 32.00 |
| 4. | காயல்பட்டினம் நகராட்சி தைக்கா தெரு நடுநிலைப்பள்ளியில் வகுப்பறை கட்டிடம் பரமாரிப்பு பணி | 11.00 |
| 5. | காயல்பட்டினம் நகராட்சி கடையக்குடி நடுநிலைப்பள்ளியில் கழிப்பறை கட்டுதல் மற்றும் வகுப்பறை கட்டிடங்கள் பரமாரிப்பு பணி | 43.00 |
| மொத்தம் | | 130.00 |

இந்நகராட்சி பள்ளிகளை மேம்பாடு செய்வதற்குரிய திட்ட மதிப்பீடு ரூ.130.00 (ரூ.30.00+ரூ.14.00+ரூ.32.00+ரூ.11.00+ரூ.43.00) இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி, திட்டப்பணியின் அவசியம் கருதி மேற்காணும் பணிகளுக்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உரிய தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விபரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட உத்திரவு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மாநில நிதி ஆணைய திட்ட நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(கோப்பு எண். 1522/2023/இ1)**

**தீர்மானம் எண்.554**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 3**

மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் 06.10.2023 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள் ந.க.ஐ4/1339295/2023 நாள்.09.10.2023 மற்றும் மதிப்பிற்குரிய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10383/2021/மா.தி3 நாள்.18.10.2023 மற்றும் இந்திய வானிலை ஆய்வு துறை மண்டல வானிலை ஆய்வு மையம் சென்னை-6 வானிலை அறிக்கையின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை - 2023 ன் காரணமாக சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மழை நீர் தேங்கும் பகுதியை கண்டறிந்து மழைநீரை எளிதில் வடிந்தோடும் விதமாக கால்வாய்கள் தோண்டி மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும், வடகிழக்கு பருவமழையின் காரணமாக அதிக மழை பெய்தால் நகராட்சி பகுதியில் ஆங்காங்கே மழைநீர் தேங்கி பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு இந்நகர் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் வசிக்கும்

பொதுமக்கள் அனைவரையும் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும், நோய் தொற்றுக்கள் பரவாத வண்ணம் பொது சுகாதார பணிகள் மேற்கொள்வதற்கும், சுகாதாரமான முறையில் குடிநீர் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும், மழை வெள்ளத்தால் சேதமடையும் மரங்கள் மற்றும் சாலைகளை உடனடியாக சீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்வதற்கும், மேலும், தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கும், இதர நடவடிக்கைமேற்கொள்வதற்கும் அதற்கான செலவினங்களை இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், நகர்மன்றத்தின் அனுமதி முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 1797/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.555</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 4**

மாண்புமிகு உள்ளாட்சிதுறை அமைச்சர் மற்றும் முதன்மைச்செயலாளர் நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் துறை அவர்களால் 12.10.2023 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகள் தொடர்பாக, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.31/2020/ஆ-1 நாள்.12.10.2023-ன்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக கூட்டரங்கத்தில் 14.10.2023 அன்று காலை 10.30 மணிக்கு நகராட்சி ஆணையர்கள் (ம) பொறியாளர்களுக்கு அனைத்து திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சிதுறை அமைச்சர் மற்றும் முதன்மைச்செயலாளர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துள்ளபடி, திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள நகராட்சிகள் புதிய சாலை பணிகளுக்கான கருத்துருவை அனுப்பி வைக்குமாறு மேற்காணும் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 14447.10 மீட்டர் நீளத்திற்கு மண் சாலைகளை மாற்றி புதிய சாலைகள் அமைப்பதற்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் குறிப்பின்படி, இந்த மண் சாலைகளை மாற்றி புதிய தார் சாலைகளாக அமைப்பதற்குரிய கருத்துரு உரிய வழிமுறையாக அனுப்பி வைக்கும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகர் பகுதியில் 14447.10 மீட்டர் நீளத்திற்கு மண் சாலைகளை மாற்றி புதிய தார் சாலைகள் அமைப்பதற்கு, தேர்வு செய்யப்பட்ட மண் சாலைகளை இந்நகராட்சி சாலை பதிவேட்டில் (Road Ledger - Uni.code) -ல் பதிவு செய்வதற்கும், சாலை அமைப்பதற்கு உரிய நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கோருவதற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு வழிமுறையாக அனுப்புவதற்கும், மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2203/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.556</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 5**

வடகிழக்கு பருவமழை-2023 தொடங்கியுள்ளதால் நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் வகையில் உள்ள அபாயகரமான அல்லது பாழடைந்த நிலையில் உள்ள கட்டிடங்கள் /மரத்தினை உடனடியாக அகற்றகோரி உரிமையாளருக்கு நகராட்சி விதிகளின் படி, அறிவிப்பு வழங்கிடவும், அகற்றுவதற்கு தவறும்பட்சத்தில் நகராட்சி விதிகளை பயன்படுத்தி தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தேவைப்படும் பட்சத்தில் இடித்து அப்புறப்படுத்துவதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் செலவினத்தை சம்பந்தப்பட்ட நபர்களிடம் நிலவருவாய் பாக்கியைப் போல் வசூல் செய்வதற்கும், நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- பணியின் அவசரம் அவசியம் கருதி இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொண்டு அந்த செலவினத்தை சம்பந்தப்பட்ட நபர்களிடம் வசூல் செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.557**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 6**

காயல்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட சாலைகளை புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன்கீழ் 41 எண்ணம் சாலை பணிகளுக்கு அரசாணை (D)எண்.192 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA3)துறை நாள்.31.03.2023-ன்படி, ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட இருந்த நிலையில் குடிநீர் குழாய் பதித்து சாலைகள் மிகவும் சேதமடைந்த நிலையிலும், சில சாலைகள் மிகவும் தாழ்வான பகுதியாகவும், இருந்தபடியால், சாலைகளில் அடிப்பரப்பில் Wet Mix Macadam விரித்தல் பணி செய்தால் மட்டுமே சாலைப் பணிகள் முழுமையாக தரத்துடன் நீண்ட நாட்கள் போக்குவரத்திற்கும், மக்கள் பயன்பாட்டிற்கும் ஏற்ற வகையில் இருக்கும் வண்ணம் அப்பகுதி பொது மக்களின் கோரிக்கையின்படி, கீழ்கண்ட ஏழு (7) சாலை பணிகளுக்கு மட்டும் Wet Mix Macadam விரித்தல் பணி செய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுகள் மன்ற அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ.எண் | தெருக்களின் விபரம் | Unicode | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | முனியசாமி கோவில் மேற்கு தெரு | 139001R002 | 1.75 |
| 2. | குலாம் சாகிப்தம்பிதோட்டம் | 139007R124 | 2.00 |
| 3. | குலாம் சாகிப்தம்பிதோட்டம் கிழக்கு தெரு | 139007R125 | 1.10 |
| 4. | குலாம் சாகிப்தம்பிதோட்டம் மேற்கு குறுக்கு தெரு | 139007R126 | 0.95 |
| 5. | ஆருசியா பள்ளி சாலை | 139007R117 | 4.25 |
| 6. | காயிதேமில்லத் நகர் வடக்கு 5th தெரு | 139015R272 | 1.25 |
| 7. | கீழ நைனார் தெரு (தீவு தெரு) பள்ளி அருகில் | 139004R091 | 4.50 |

**அலுவலக குறிப்பு**

- பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.558</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 7**

அரசாணை எண்.60 நிதித் துறை (SFC-MC) நாள். 28.02.2023-ம் தேதிய ஆணையின்படி, 6-வது மாநில நிதி ஆணையம் (State Finance Commission) திட்ட நிதியில் காயல்பட்டினம் நகராட்சியில் உள்ள (6) நகராட்சி பள்ளிகளில் மேம்பாடு மற்றும் புதிய வகுப்பறைகள் கட்டு பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யும் பொருட்டு வரைபடங்கள், போட்டோ மற்றும் இதர குறிப்புகள் இணைத்து ஒன்பது (9) மதிப்பீடு புத்தகங்கள் தயார் செய்து கொடுத்த வகைக்கு ரூ.46,323/- (ரூபாய் நாற்பத்து ஆறாயிரத்து முந்நூறு இருபத்து மூன்று மட்டும்) இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளரால் செலவு செய்யப்பட்டுள்ளதை வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு திட்ட மதிப்பீடு தயார் செய்வதற்கான செலவினம் ரூ.46,323/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் திருமதி.க. ஜான்சிராணி என்பவரின் பெயரில் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசியம் கருதி இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.559</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 8**

காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் உள்ள இரண்டாம் எண். கிணற்றில் உள்ள 7.50 H.P மோட்டார் பேரிங் சேதமடைந்துள்ளது. குடிநீர் அவசியத்தை கருத்தில் கொண்டு அதனை சரி செய்து புதிய Starter வாங்கி பொருத்துவதற்குரிய செலவினம் ரூ.32,000/- (ரூபாய் முற்பத்து இரண்டாயிரம் மட்டும்) இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.560</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 9**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து 100HP மின் மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு நகருக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இதில் 2-ம் எண் மோட்டார் மற்றும் பம்பில் பழுது ஏற்பட்டுள்ளதால், அதனை உடனடியாக சரி செய்வதற்குரிய செலவினம் ரூ.1,78,700/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து எழுநூறு மட்டும்) இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.561**

- அனுமதிக்கப்படுகிறது.
- குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 10**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 100HP மின்மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு 350mm DI Pipe மூலம் காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கும் நீரேற்றப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி, தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பம்பிங் செய்யப்படும் குடிநீர் மெயின் குழாய் காயல்பட்டினம் நகருக்கு வரும் வழியில் ஆதிநாதபுரம் என்கிற ஊரில் தென்கால் வாய்க்கால் பகுதி வழியாக வரும் வழியில் தென்கால் பகுதி கடப்பதற்கு இரும்பு தூண் பாலம் அமைக்கப்பட்டு, அதன் மேற்புறம் 350mm அளவுள்ள DI குழாய் வருகிறது. தற்பொழுது தாமிரபரணி ஆற்றில் இருந்து தென்கால் வாய்க்கால் பகுதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால் அதில் அதிகமான அளவில் அமலி செடிகள் வந்து பாலத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தூண்களை சுற்றி அடைப்பு ஏற்படுத்தி வருவதால் அப்பாலம் கீழேவிழக்கூடிய நிலையில் உள்ளது. அவற்றை சரி செய்வதற்கு பாலத்தின் கீழ் உள்ள அமலி செடிகள் மற்றும் குப்பைகளை ஆட்கள் மூலம் அகற்றி சுத்தம் செய்வது அவசியமாகிறது. அவசர அவசியம் கருதி இப்பணியினை உடனடியாக செய்து தருமாறு இவ்வலுவலக குடிநீர் பொருத்துநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இந்நகர் குடிநீர் பணியினை அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் பணிகளை உடனடியாக செய்வதற்கும், ரூ.24,500/-க்கு (ரூபாய் இருபத்து நான்காயிரத்து ஐநூறு) செலவினங்கள் மேற்கொள்ள இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.562</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 11**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்று நிலையத்தில் 100H.P மின்மோட்டார் மூலம் அங்கு அமைந்துள்ள கீழ்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு காயல்பட்டினம் அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு மேலே ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி, தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கீழ்நிலை நீர்தேக்கத்திற்கு தாமிரபரணி ஆற்று படுகையில் அமைந்துள்ள 6 எண்ணம் இன்பில்டரேஷன் கிணறுகளில் இருந்து 7.5H.P சப்மெர்சிபில் மின்மோட்டார் மூலம் பம்பிங் செய்யப்படுகிறது. தற்பொழுது 6 எண்ணம் கிணறுகளின் அருகில் தமிரபரணி ஆற்றில் தண்ணீர் திறக்காமல், இருந்தால் கிணற்றை சுற்றி நீர் வறத்து வற்றி வறட்சியாக இருந்த நிலையில் தற்பொழுது தாமிரபரணி ஆற்றுக்கு பாபநாசம் டேம்-லிருந்து தண்ணீர் திறந்து விடபட்டுள்ளதால் ஆற்று கரையோரம் அடைப்பட்டு இருக்கும் மணலை ஜேசிபி இயந்திரம் மூலம் சுத்தம் செய்யவும், அமலி செடிகளை அகற்றவும், அவசர அவசியம் கருதி ஜேசிபி இயந்திரம் மூலம் இப்பணியினை உடனடியாக செய்து தருமாறு இவ்வலுவலக குடிநீர் பொருத்துநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் பணிகளை உடனடியாக செய்வதற்கும், ரூ.23,500/-க்கு (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து ஐநூறு) செலவினங்கள் மேற்கொள்ள இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.563</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**